# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# தனி அலுவலர் திரு.ஆ.தாணுமூர்த்தி அவர்களின்
# சாதாரண கூட்ட நடவடிக்கை நாள் 31.03.2020
# தீர்மான நகல்

தனி அலுவலர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி **2020–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (க.எண். 1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 325

2) இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி **2020–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (க.எண். 1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 326

3) இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் பிப்ரவரி **2020–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (க.எண். 1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 327

4) இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் பிப்ரவரி **2020–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (க.எண். 1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 328

**5).** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் ஆண்டு குத்தகை இனமான இஞ்சி மரப்பா தட்டில் வைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமைக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 223 நாள் 31.01.2018 இல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு திரு.சி.செல்வராஜ் என்பவருக்கு 2018–19 ஆண்டுக்கு குத்தகை தொகை ரூ.1,90,000/– நிர்ணயம் செய்து இரண்டாம் ஆண்டுக்கு முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்தும் மூன்றாம் ஆண்டுக்கு இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வின் அடிப்படையில் இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் 2400/2017/அ3 நாள் 26.03.2018 இன் படி ஆணையிடப்பட்டது. அதன்படி குத்தகைதாரர் 2019–20 ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ.1,99,500/–ஐ செலுத்துமாறு 22.02.2019 மற்றும் 28.03.2019 மற்றும் 12.12.2019 ஆகிய தேதிகளில் குத்தகைதாரருக்கு அறிவிப்புகள் வழங்கியும் இதுநாள் வரையில் செலுத்தப்படவில்லை.

இந்நகராட்சியின் வருவாய் ஆய்வாளர் தனது 02.03.2020ந் தேதிய குறிப்பில், பேருந்து நிலையத்தில் தலையில் சுமந்து கூவி இஞ்சி மரப்பா விற்பனை செய்யும் தொழில்மேற்கொள்ளப்பட்டு வருவதால் பேருந்து

நிலையத்தில் பெரும் பாதிப்பு ஏற்படுவதாகவும் இதனை தவிர்ப்பதற்கு ஏதுவாக மேற்படி ஆண்டுக்குத்தகை இனத்தினை 01.03.2020 முதல் நிரந்தரமாக இரத்து செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி குத்தகைதாரரிடமிருந்து நிலுவைத்தொகையை உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு வசூல் செய்திடவும் அதற்காகும் செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேலும் மேற்படி ஆண்டுக்குத்தகை இனத்தினை 01.03.2020 முதல் நிரந்தரமாக இரத்து செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 329

6). இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் காலி நிலங்கள் பொதுஏலம் விடப்பட்டு, 31.03.2017 உடன் 9 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007–ன்படி அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு, மேற்படி மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1842/2014/அ3 நாள்.30.10.2018ல் ஒப்புதலுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை ஏற்பது குறித்து சம்மந்தப்பட்ட கடை குத்தகைதாரர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.2230/2017/அ3, நாள்.08.11.2018ன் வாயிலாக பழைய பேருந்து நிலையம் கடை எண்.45ன் குத்தகைதாரர் எம்.ராஜேந்திரன் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதில் எவ்வித முன்னறிவிப்பு இல்லாமல் கடையினை காலி செய்துவிட்டதாகவும், ந.க.எண்.3060/2016/அ3 நாள்.02.05.2018ன் வாயிலாக பழைய ஆஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண் 26ன் குத்தகைதாரர் வி.கே.வீரக்குமார் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதில் எவ்வித முன்னறிவிப்பு இல்லாமல் கடையினை காலி செய்துவிட்டதாகவும், மேற்படி கடைகள் 23.03.2020 அன்று நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் வருவாய் ஆய்வர் 23.03.2020 ந்தேதிய தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மேற்படி இரண்டு கடைகளையும் வருவாய் ஆய்வர் வாயிலாக இந்நகராட்சி வசம் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி கடைகளை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியின் வாயிலாக கடையை வாடகைக்கு விடநடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி கடைக்கு மறு ஏலம் விட்டு, ஏலம் எடுத்த குத்தகைதாரர் வசம் கடை ஒப்படைக்கும் காலம் வரை நகராட்சிக்கு ஏற்படும் அனைத்து இழப்பிற்கும் முன்னாள் குத்தகைதாரர் எம்.ராஜேந்திரன்மற்றும் வி.கே.வீரகுமார் ஆகியோரை முழுப்பொறுப்பாக்கி, நீதிமன்றம் மூலம் வழக்கு தொடர்ந்து இழப்பீட்டுத் தொகையினை அவர்களிடமிருந்து சட்ட ரீதியாக வசூல் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:**– மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 330

7). இவ்வலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள கணினி பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் 2020–21 ம் ஆண்டிற்கு தேவைக்கேற்ப அவ்வப்போது அரசு அங்கீகாரம் பெற்ற கோயம்புத்தூர் மாவட்ட பிரிண்டர்ஸ் சர்வீஸ் இன்டஸ்ட்ரியல் கோ – ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட் , 1–4 முதல்தளம் , பட்டுப்பூச்சி லேன், நெ.1,ஆர்.ஜி வீதி, சௌக்கர்பேட் கோயம்புத்தூர் – 641 001 நிறுவனத்தில் வாங்கிக்கொள்ளவும், அதற்காக ஆகும் செலவினம் ரூ.15,00,000/– க்கு மிகாமல் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் செலவினத்தொகையை பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. உள்ளாட்சி தேர்தல் காலத்தாலும் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 331

8). இவ்வலுவலகத்திற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் அறிவிப்பு வழங்கும் கணினி பேப்பர் மற்றும் கணினி வரிவிதிப்பு இரசீதுகள் சேவை மைய இரசீதுகள் 2020–21 ஆம் ஆண்டிற்கு தேவைக்கேற்ப அவ்வப்போது அரசு அங்கீகாரம் பெற்ற கோயம்புத்தூர் மாவட்ட பிரிண்டர்ஸ் சர்வீஸ் இன்டஸ்ட்ரியல் கோ – ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட் , 1–4 முதல்தளம் , பட்டுப்பூச்சி லேன், நெ.1,ஆர்.ஜி வீதி, சௌக்கர்பேட் கோயம்புத்தூர் – 641 001 என்ற நிறுவனத்தில் வாங்கிக்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினம் ரூ.15,00,000/–க்கு மிகாமல் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) வாங்கிக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் செலவினத்தொகையை பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 332

9). இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 24.03.2020 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| | குடிநீர் நிதி | | | |
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் வெடிப்புகள் தனியார் சேவை மூலம் (2020–2021) வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9,90,000 | M/s.ஸ்ரீசரவணன் & கோ ஒப்பந்ததாரர் | 0.16 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | T.சுகுமார் ஒப்பந்ததாரர் | 2.55 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நெடுஞ்சாலைதுறைக்கு சொந்தமான சாலைகள் மற்றும் நகராட்சி சாலைகள் பராமரிப்பு பணி | 1,50,000 | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 0.17 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.M.P.K. கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் | 1.97 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த சுலீஸ் வால்வு தொட்டிகள் புதுப்பித்தல் பணி | 1,50,000 | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 0.38 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.M.P.K. கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் | 2.91 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ஆழ்துளை கிணற்றில் 97 எண்கள் கைபம்புகள் 2020–21 ஆண்டிற்கு பராமரிப்பு பணி | 50,000 | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.42 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.M.P.K. கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் | 11.14 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | கல்வி நிதி | | | |
| 5 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2ல் உள்ள ஜெயராம் நடுநிலைப்பள்ளியில் Pressed Tiles ஒட்டும் பணி | 1,80,000 | M/s.M.P.K. கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் | 0.37 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | R.மாணிக்கம் ஒப்பந்ததாரர் | 3.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொது நிதி | | | |
| 6 | வார்டு எண்.29ல் உள்ள பெரியண்ணன் வீதியில் சிறுபாலம் அமைக்கும் பணி | 1,20,000 | V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 0.32 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 3.45 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-**

1. மேற்படி பணிகளில் வ.எண்.1—க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.ஸ்ரீசரவணன் & கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2. வ.எண்.2—க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. வ.எண்.3—க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
4. வ.எண்.4—க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
5. வ.எண்.5—க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.M.P.K. கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
6. வ.எண்.6—க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள V.தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 333

10. இந்நகராட்சி பணியாளர்கள் 2020—2021 ம் ஆண்டில் ஒய்வு பெறுபவர்க்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை அதற்குண்டான வட்டித்தொகை மற்றும் பங்குத்தொகையினை வழங்க உத்தேச செலவினம் ரூ.3,00,000/— க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 334